முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், மதுராந்தகம் நகரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலையையும், தமிழ்நாட்டின் வரலாற்றை மாற்றியமைத்த கலைஞர் அவர்களின் பேனா வடிவிலான சிலையையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

தி.மு.கழகத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக உருவாக்க அயராது உழைத்த கழகத்தின் மூத்த முன்னோடிகள் 1000 பேருக்கு காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக்கழகம் சார்பில் மதுராந்தகத்தில் தலா ரூ.10,000 பொற்கிழி மற்றும் 10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத்தொகையினையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இதில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., க.செல்வம் எம்.பி. மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

குஜராத் மாநிலம், கெவடியாவில், நேற்று முன்தினம் (19.8.2023) 19வது, கடலோர மாநிலங்கள் மேம்பாட்டுக் குழுமக் கூட்டம் (MSDC), ஒன்றிய துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டு சார்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்துக் கொண்டு, தமிழ்நாட்டின் துறைமுகங்களின் சிறப்புகள் குறித்து உரையாற்றினார். இக்கூட்டத்தில், தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கடல்சார் வாரிய தலைமை நிர்வாக அலுவலர் எஸ்.நடராஜன் மற்றும் மாநில துறைமுக அலுவலர் எம்.அன்பரசன் ஆகியோர் பங்குபெற்றனர்.

## லடாக்கில் பயங்கரம்! விபத்தில் சிக்கிய ராணுவ வாகனம்!

லடாக், ஆக.21 - ராணுவ வாகனம் ஒன்று லடாக்கில் உள்ள ஆற்றில் கவிழ்ந்து விபத்தில் சிக்கி யது. லே பகுதியில் இருந்து சுமார் 150 கிலோமீட்டர்கள் தொலைவில் உள்ள கியாரி என்ற பகுதியில் இந்த விபத்து ஏற்பட்டது. ராணுவ வகனம் தரையில் சறுக்கியதால், நிலை தடுமாறி ஆற்றில் கவிழ்ந்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

விபத்தில் சிக்கிய ராணுவ வாகனத்தில் பத்து வீரர்கள் (எட்டு ஜவான்கள், ஒரு ஆணையர்) பயணம் செய்த தாகவும், இவர்களில் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்றும் தகவல்கள் வெளியாகி வரு கின்றன. விபத்து நடந்த பகு தியில் மீட்பு பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

### தியாகராயர் நகர் - பொதுக்குழு உறுப்பினர்

## அ.வாசுதேவன் சகோதரி மறைவு!

சென்னை, ஆக. 21 - கழக தலைமை பொதுக் குழு உறுப்பினர் தியாகரா யர் நகர் அ.வாசுதேவன் சகோதரி திருமதி. எஸ்.அம் பிகா (50) அவர்கள் நேற்று முன்தினம் இரவு 9.00 மணி யளவில் இயற்கை எய்தி னார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் இறுதி ஊர் வலம் நேற்று (20 - 8 - 2023 - ஞாயிறு) மாலை 4.00 மணியளவில் வடபழனி ஏ.வி.எம். இடுகாட்டில் நடைபெற்றது.

### நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி

## கரூர் மாவட்டத்தில் உண்ணாவிரத அறப்போர்!

### மாணிக்கம் - இளங்கோ - சிவகாமசுந்தரி - எம்.செந்தில்நாதன் - முன்னணியினர் பங்கேற்பு!

கரூர், ஆக. 21 - நீட் தேர்வை ரத்து செய் யாத ஒன்றிய அரசை கண் டித்தும், கொக்கரிக்கும் ஆளுநரை கண்டித்தும் கரூர் தலைமை அஞ்சலகம் முன்பு மாபெரும் உண் ணாவிரத போராட்டம் நடைபெற்றது. அரவக்கு றிச்சி சட்டமன்ற உறுப்பி னர் இரா இளங்கோ தலைமை வகித்தார். மாவட்ட இளைஞரணி செயலாளர் சக்திவேல் வர வேற்புரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் கள் இரா மாணிக்கம், க.சிவகாம சுந்தரி, மருத் துவ அணி துணைத் தலை வர் எம்.செந்தில்நாதன், நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலா ளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, மாநில நிர்வாகிகள் முனவர் ஜான், வே.பல்லவி ராஜா, பி.விஜயக்குமார்,

கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கனேசன், துணை மேயர் தாரணி பி. சரவணன்,

மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, பி.வி. பாரத், கரூர் மாநகர செய லாளர் எஸ் பி கனகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜ கோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகு ருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, பொதுக் குழு உறுப்பினர்கள் வி. கருப்பணன், எஸ்.ஆறுமு கம், கே.வேலுச்சாமி, விகே.ராஜகண்ணு, பி.பி. சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏநஞ்சுண் டேஸ்வரன், ச.சிவகாமி, எம்.சிவசாமி, எஸ்.காளி யப்பன், என்.ராமலிங்கம்,

பகுதி செயலாளர்கள் கரூர் கணேசன், க.சுப்பிர மணியன், க.அன்பரசன், ஆர்.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் எம். எஸ்.மணியன், என்.மணி கண்டன், கே.கருணாநிதி, த.கார்த்திக், சி.வளர்மதி, எம்.ரகுநாதன், கே.பாஸ்க ரன், கே.ரவிராஜா, எம். ராமலிங்கம், கே.வீராசாமி (எ) சுதாகர், அ.சந்திரன், இரா.ராமர் Ex.MLA, ஜி. அண்ணாதுரை, பி.முத்துக் குமாரசாமி, வி.கே.வேலுச் சாமி, என்.செல்வராஜ், சி.கதிரவன், எல்.கரிகா லன், ப.தியாகராஜன், பள் ளப்பட்டி பொறுப்பாளர் அ.வாசிப் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குண சேகரன், பேரூர் செயலா ளர்கள் க.முரளிராஜா, கா.அம்மையப்பன், சி.தங் கராஜ், எம்.சசிக்குமார், ஆர்.மோகன்ராஜ், இ.ரவீந் தி ரன், எம்.முத்து (எ) சுப்பி ரமணி ஆகியோர் முன் னிலை வகித்தனர் .

அனைத்து அணிகளின் நிர்வாகிகள், இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவர் அணி நிர்வா கிகள் கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### மீனவர்களையும், தொழிலையும் பாதுகாக்கும் வகையில்

## ஓசையின்றி சேவை செய்யும் தமிழ்நாடு முதல்வருக்கு கிரேட் சல்யூட்!

சென்னை, ஆக. 21 - ராமேஸ்வரத்தில் மீன வர் நல மாநாட்டில் பங் கேற்று உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீனவர்களின் வாழ்வாதாரம் உயரவும் அவர்களின் குறைகளை நிறைவேற்றும் வகையில் முத்தான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். இத் திட்டத்திற்காக ரூ.926.88 கோடி நிதியும் ஒதுக்கி உத் தரவிட்டுள்ளார். இதனால் மீனவர்கள் மகிழ்ச்சிக் கட லில் உள்ளனர். இந்த நிகழ்வை 'தினகரன்' நாளேடு தனது தலையங் கத்தில் தனது வாழ்த்துக ளையும், பாராட்டு மழை யையும் தெரி வித்து "கிரேட் சல்யூட்" அடித் துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புண்ணிய ஸ்தலங் களில் ஒன்றான ராமேஸ்வ ரத்தில் நேற்று நடந்த மீன வர் நல மாநாட்டில் பங்கேற்று பேசிய முதல் வர் மு.க. ஸ்டாலின், மீன வர்களின் நலன் கருதியும், மீன்பிடி த்தொழில் மேம் பாட்டுக்காகவும் 10 அறி விப்புகளை வெளியிட்டு அசத்தியுள்ளார். அதாவது, மீனவர்க ளுக்கான வீடு கட்டும் திட்டத்தில் 5,035 பேருக்கு பட்டா, 45 ஆயி ரம் பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன், மீன்பிடி தடைக்கா லத்தின்போது வழங்கப் பட்ட நிவாரணம் ரூ.5 ஆயிரத்தில் இருந்து ரூ.8 ஆயிரமாக உயர்வு, 1,000

### 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு மழை!

தினகரன்

ஆகஸ்ட் 19, 2023 சனிக்கிழமை

பாசக்கரம் நீட்டிய முதல்வர்

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றான ராமேஸ்வரத்தில் நேற்று நடந்த மீனவர் நல மாநாட்டில் பங்கேற்று பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், மீனவர்களின் நலன் கருதியும், மீன்பிடித்தொழில் மேம்பாட்டுக்காகவும் 10 அறிவிப்புகளை வெளியிட்டு அசத்தியுள்ளார். அதாவது, மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தில் 5,035 பேருக்கு பட்டா, 45 ஆயிரம் பேருக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவு கடன், மீன்பிடி தடைக்காலத்தின்போது வழங்கப்பட்ட நிவாரணம் ₹5 ஆயிரத்தில் இருந்து ₹8 ஆயிரமாக உயர்வு, 1,000 நாட்டுப்படகு மீனவர்களுக்கு 40 சதவீத மானியத்தில் இயந்திரங்கள், நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் மண்ணெண்ணெய் அளவு 3,400

நாட்டுப்படகு மீனவர்க ளுக்கு 40 சதவீத மானியத் தில் இயந்திரங்கள், நாட் டுப்படகு உரிமையாளர்க ளுக்கு மானிய விலையில் வழங்கப்படும் மண் ணெண்ணெய் அளவு 3,400 லிட்டரில் இருந்து 3,700 லிட்டராக அதிக ரிப்பு, விசைப்படகு களுக்கு மானிய விலையில் டீசல் 18 ஆயிரம் லிட்டரில் இருந்து 19 ஆயிரம் லிட்ட ராக உயர்வு, நாட்டுப்பட குகளுக்கு 4 ஆயிரம் லிட்ட ரில் இருந்து 4,400 லிட்டராக உயர்வு, தங்கச் சிமடத்தில் மீன்பிடி துறை முகம் மற்றும் பாம்பன் வடக்கு பகுதியில் தூண் டில் வளைவு அமைக்கும் பணி, மீனவர் விபத்து காப் புறுதி திட்டம் மற்றும் காணாமல் போன மீனவர் குடும்பத்துக்கு சுழல் நிதி வழங்கும் திட்டம், மீனவர் வீட்டு வசதி அலகுத் தொகை ரூ.1.7 லட்சத்தில் இருந்து ரூ.2.4 லட்சமாக உயர்வு, மீனவ

கிராமங்களில் கடல் அரிப்பை தடுக்கவும், பட குகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்ப டும் என முத்தான அறிவிப் புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட் டுள்ளார்.

இந்த திட்டங்களுக்காக ரூ.926.88 கோடி நிதி ஒதுக் கப்பட்டுள்ளது. இதன்மூ லம், 2,77,347 மீனவர்கள் பயன்பெறுவார்கள் என் றும் அறிவித்துள்ளார். கடந்த 2 ஆண்டுகளில் மீன வர் நலனுக்காக திமுக ஆட் சியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. குறிப்பாக, நீண்ட கால மாக மீன்வளத்துறை என அழைக்கப்பட்ட இத் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை என மாற்றப்பட்டது. 14 கட லோர மாவட்டங்களை சேர்ந்த 2.07 லட்சம் மீன வர்களுக்கு கடந்த 2 ஆண் டில் ரூ.67 கோடி நிவார ணம் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி தொழிலில் 5வது பெரிய மாநிலமாக தமிழ் நாடு திகழ்கிறது. 1,076 கி.மீ. நீளமான கடற்க ரையை கொண்ட தமிழ் நாடு, மீன்பிடித்தொழிலில் தொடர்ந்து முத்திரை பதித்து வருகிறது.

வகை வகையாக கட லில் அன்றே கலம் செலுத் தியவர்கள் நம் தமிழர்கள். இப்படி நம் மீனவர்க ளுக்குரிய பெருமை ஒருபக் கம் இருந்தாலும், இன் னொரு பக்கம் எல்லை தாண்டுதல் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, இந்திய மீனவர்கள் மீது, இலங்கை கடற்படை துப் பாக்கி சூடு நடத்துகிறது. இதை, ஒன்றிய அரசும், பிர தமர் மோடியும் கண்டு கொள்வதில்லை. இப்படி இருக்கையில், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நம் மீனவர்களை யும், அவர்களது தொழிலையும் பாதுகாக்கும் வகையில், நேரில் சென்று பாசக்கரம் நீட்டியுள்ளார். இது, மீன வர்கள் கண்களில் ஆனந்த கண்ணீரை வரவழைத் துள்ளது.

கடலை நம்பி, தமிழ் நாட்டில் பல லட்சம் மக் கள் வாழ்ந்து வருகின்றனர். கடலில் இருந்து மனித னுக்கு தேவையான உண வுப்பொருட்கள் முதல் ஆடம்பர பொருட்கள் வரை கிடைக்கிறது. இந்நி லையில், எதிர்காலத்தில் மனித குலத்துக்கு தேவை யான உணவில், 90 சதவீ தம் கடலில் இருந்தே பெறப்போகிறோம் என்று ஆய்வாளர்கள் கூறு கின்ற னர். அத்தகைய கடல் உண வுகளை, மழை, வெயில், புயல் என பாராது கரைக்கு கொண்டுவந்து சேர்க்கும் நம் மீனவர் நலன் காக்க, ஓசையின்றி சேவை செய்து வரும் தமிழ்நாடு முதல்வ ருக்கு கிரேட் சல்யூட்.

இவ்வாறு முதல்வருக்கு 'தினகரன்' தலையங்கத்தில் 'கிரேட் சல்யூட்' அடித்துள் ளது.

## 'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!

நீட் தேர்வினை ரத்து செய்ய கோரி ஈரோடு தெற்கு, வடக்கு மாவட்டத்தை சார்ந்த இளைஞர் அணி, மாணவரணி, மருத்துவ அணிகளின் சார்பில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதப் போராட்டத்தில் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணியினர், மாணவர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்டம் வத்தல்மலை சாலை வாசுதேவன் நகரில் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறப்பாக பணியாற்றிட ஏதுவாக கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.பி.சக்திவேல் ஏற்பாட்டில், மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் புதிய கிழக்கு ஒன்றிய தி.மு.க.செயலகத்தை திறந்து வைத்து,BLA 2 கழக முகவர்கள் கூட்டத்தில் முகவர்கள் ஆற்றிய பணிகளை ஆய்வு செய்தார்.உடன் அவைத்தலைவர் கே.மனோகரன்,மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அ.சத்தியமூர்த்தி,தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.சித்தார்த்தன்,ஒன்றிய செயலாளர்கள் ஏ.எஸ்.சண்முகம்,கே.எஸ்.ஆர்.சேட்டு,என்.ஏ.மாது, இந்து சமய அறநிலையத்துறை மாவட்ட தலைவர் பி.கௌதமன்,பொதுக்குழு உறுப்பினர் பி.லட்சுமணன்,ஒன்றிய அவைத்தலைவர் பி.ஜி.கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்.